1993 ஏப்ரல் 15]

பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான—அந்த மக்களுடைய குறைகளை தீர்க்கும் அளவுக்கு—அந்தச் சாலையில் ஒரு பாலம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே இரண்டு பாலங்களைக் கேட்டிருக்கின்றார்கள். இப்போது ஒரு பாலத்தைக் கேட்கிறார். இதுபோன்று பல்வேறு தொகுதிகளில் பிரச்சினைகள் இருக்கின்றன. இந்த ஆண்டு ஒரு தொகுதிக்கு ஒரு பாலம் என்ற அளவிலே எந்த அளவுக்கு எடுக்க வேண்டும் என்று அவர் சொன்னால் அதற்கு முன்னுரிமை கொடுத்து இந்தப் பாலம் தான் வேண்டுமென்று சொன்னால், பாலம் எடுப்பதிலே முன்னுரிமை எதற்கு வழங்கலாம் என்று அவர் தெரிவித்தால் இந்தப் பாலம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொன்னால் அதை எடுத்துக்கொள்ளலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். மற்றவற்றிற்கு வாய்ப்பு இருக்காது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. தா. பொன்னுவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய படி அந்த மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையை நிறைவு செய்யும் பொருட்டு திருமாந்துறை-கீரனூர் இடையில் அமைக்கும் பாலத்தை அமைத்துக்கொடுக்க முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு இந்தத் திட்டம் செயல் ஆக்கத்திலே எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 349, திருமதி அ. தி. சரஸ்வதி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்:

349—

பவானிசாகர் அணையில் தூர்வாரும் பணி

* 10682—திருமதி அ. தி. சரஸ்வதி :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், பவானிசாகர் அணையில் தூர்வார அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பணி தொடங்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பொதுப்பணித்துறை அமைச்சர் :

[1993 ஏப்ரல் 15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே :

(அ) பவானிசாகர் அணையில் தூர்வாரும் நடவடிக்கை அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திருமதி அ. தி. சரஸ்வதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பரிசீலனையில் இல்லை என்று சொன்னாலும் அதை மீண்டும் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அங்கு தூர் வாராமல் இருப்பதால், 120 அடி ஆழமுள்ள அந்த அணையில் 85 அடி அளவுக்குத்தான் தண்ணீர் நிற்கிறது. தூர் வராமல் இருப்பதால் மீன் அழுகிய நிலையில் உள்ளது. பவானிசாகர் சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி பாதிக்காவிட்டாலும் எங்கள் சத்தியமங்கலம் தொகுதிக்கு இந்த தண்ணீர் வருவதால் அதிகமாகப் பாதிக்கப் படுகிறது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனி கவனம் செலுத்த வேண்டும். மீன்கள் அழுகிய நிலையில் மீன்கள் தலை இல்லாமல், உடம்பு பாதியாகவும், சிறகுகள் தீய்ந்த நிலைகளிலே இருக்கின்றன. மீன்களை சாப்பிடுகின்ற மக்களுக்கும் வியாதிகள் வருகின்றன. அந்த மீன்கள் சாவதற்குக் காரணமே மேட்டுப்பாளையத்திலே அமைந்துள்ள விஸ்கோஸ் ஆலையின் கழிவு நீர்தான். அந்தக் கழிவுநீர் கலப்பதால்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி சரஸ்வதி, நீங்கள் கேட்டிருப்பது தூர் வார நடவடிக்கை எடுப்பது பற்றிய பிரச்சினை. கழிவு நீர் வருகின்ற காரணத்தினால் மீன்கள் எல்லாம் சாகின்றன என்று சொன்னால், அதுபற்றி நீங்கள் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்குக் கேள்வி போட வேண்டும். இந்த மாதிரியான கேள்வியை அவரிடம் கேட்கவேண்டும் இது தூர் வாருகின்ற பிரச்சினை பற்றியது தான் பொது பணித் துறை அமைச்சர் அவர்கள் டதில் சொல்லலாம்.

முற்பகல் 10-30

திருமதி அ. தி. சரஸ்வதி : தூர் வாராமல் இருப்பதால் அணையின் அளவு குறைந்துகொண்டே இருக்கிறது. ஆகவே அமைச்சர் அவர்கள் தூர்வார நடவடிக்கை எடுக்கவேண்டுமாய் கேட்டுக்கொண்டு அரசு விரைவில் ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானி நீர்த்தேக்கத்தைப் பொறுத்தமட்டிலே அதனுடைய வடிவமைப்புப்படி கொள்ளளவு 932 மில்லியன் கன மீட்டர் ஆகும். பூண்டி நீரியல் நீர்

1933 ஏப்ரல் 15]

நிலவியல் மையத்தினரால் அதை ஆய்வுசெய்தபோது தற்போது 895 மில்லியன் கனமீட்டராகக் கொஞ்சம் குறைந்திருக்கிறது. அதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால், அணைகளை தூர்வாருகின்றபோது எடுக்கின்ற மண்ணைக் கொட்டுவதற்கு சில இடங்களில் வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. இப்பொழுது அணைகளைத் தூர்வார வேண்டுமென்று சொன்னாலும் அதிகமான செலவினங்கள் இருக்கின்ற காரணத்தினாலே, நிதியாதாரங்கள் போதுமான அளவு இல்லாத காரணத்தினாலே தான் பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டு 'டேம்' சேப்டி ஸ்கீம், என்கிற திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறோம். ஆனால், அனைத்து அணைகளையும் இந்தத் திட்டத்திலே கொண்டு வர முடியாது. அந்த அளவுக்கு நிதியாதாரம் போதாது. இருந்தாலும் அணைக்குத் தண்ணீர் வருகின்றபோது அந்த வண்டல்மண் அடித்து வராமல் உள்ளே கொள்ளளவு குறைந்து விடாமல் இருப்பதற்காக சில நடவடிக்கைகளை, இந்த அரசு புதிய திட்டங்களைத் தீட்டியிருக்கிறது. ஆகவே, எதிர்காலத்திலே, இப்படிப்பட்ட பிரச்சினைகள் இல்லாமல் அரசு பார்த்துக்கொள்ளும். இந்த அணையினுடைய கொள்ளளவை மறுபடியும் ஆய்வு செய்து எந்த அளவுக்கு இதைச் சீரமைக்க முடியும் என்று பார்த்து அதற்கான நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும், துறை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி அ. தி. சரஸ்வதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் திறமையான அமைச்சர், திறமையாக பதில் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், எவ்வளவு நாளில் தூர் வார அரசு நடவடிக்கை எடுக்கும் என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் திறமையாக இருந்தாலும், பண வசதி வேண்டும். (சிரிப்பு) வெறும் திறமையை மட்டும் வைத்து வேலை செய்துவிட முடியாது. நிதி வேண்டும். நிதியாதாரம் இருந்தால்தான் வேலைகளை எடுத்துச் செய்ய முடியும். ஆகவே, இருக்கின்ற பிரச்சினைகளை எல்லாம், எல்லாப் பிரச்சினைகளை யும் ஒரே காலத்திலே எடுத்துச் செய்ய முடியாது. 40 ஆண்டு கள், 45 ஆண்டுகளாக இருக்கின்ற பிரச்சினைகளையும் நாம் ஒரே காலத்திலே செய்ய முடியாது. அதற்குப் படிப்படியாக திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். இப் படிப்பட்ட திட்டங்களுக்கு மாண்புமிகு உறுப்பினருடைய யோசனை நல்ல யோசனைதான். ஆகவே, இதை அரசு பரிசீலனையில் எடுத்துக் கொண்டு, இருக்கின்ற நிதியாதாரத்தையும் கணக்கிலே கொண்டு மிக விரைவிலே இந்த நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கி றேன். எதிர்காலத்திலே, இப்படிப்பட்ட பிரச்சினைகள் வரா மல் இந்த அரசு தடுப்பதற்கும் உரிய முயற்சிகளை மேற்கொள் ளும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. கே. சின்னசாமி.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்பவானி நீர்த்தேக்கத்தில் ஏற்படுகின்ற வண்டல் மண்ணை அந்தப் பகுதி விவசாயிகள் அவர்களாகவே பெருமளவுக்கு அரசினுடைய உதவியோடு எடுத்து வருகிறார்கள். அதற்குப் பொதுப்பணித்துறை தனியாக ஒரு அனுமதிச் சீட்டு வழங்கி, அந்த லாரியினுடைய நம்பரை நோட் பண்ணித் தருகிறார்கள். விவசாயத்திற்கு என்று ''பிரி'' ஆக வழங்கிக்கொண்டிருக்கிறார்கள். இடையிலே வந்த கவர்னருடைய ஆட்சியில் அந்த மண்ணை எடுப்பதற்கான பொறுப்பை வனத் துறை எடுத்துக் கொண்டது. எடுத்துக்கொண்டு, ஒரு லாரிக்கு ஒரு நாளைக்கு 100 ரூபாய்க்கு மேல் அதற்குப் பணம் வசூலிக்க வேண்டுமென்று திட்டத்தையும் கொண்டு வந்தார்கள். நம்முடைய அரசு, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பு ஏற்ற பின்பு, இதை முதல்வர் அவர்களிடத்திலேயும், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களிடத்திலேயும் அந்த விவசாயிகள் பெரும் திரளாக எடுத்து வைத்தார்கள். அந்தக் கோரிக்கையை ஏற்று மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய உத்தரவின் பேரில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் மீண்டும் அந்தப் பகுதி விவசாயிகள் அந்த வண்டல் மண்ணை எந்தவித கட்டண வசூலும் இல்லாமல் எடுத்துக் கொள்ளலாம் என்ற ஒரு உத்தரவு வழங்கப்பட்டு அந்த உத்தரவு இன்றைக்கு செயல் பட்டுக்கொண்டிருக்கிறது. அதற்காக அந்தப் பகுதி விவசாயிகள் சார்பாக நன்றி தெரிவிப்பதோடு, இன்னும் எல்லாப் பகுதிகளையும் சேர்ந்த அனைவரும் அந்த வண்டல் மண்ணை எடுத்துக் கொள்ளலாம் என்ற உத்தரவை வழங்கினால். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி பொதுப்பணித் துறை அமைச்சருடையது. நீங்கள் போக்குவரத்துத் துறை அமைச்சருக்கு நன்றி சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். பொதுப் பணித்துறை அமைச்சரிடம் கேள்வி கேளுங்கள்.

திரு. வி. கே. சின்னசாமி : அந்த கொங்குமராடா போகிற வழியில் சுச்சன்குட்டை பகுதியில் பாரஸ்ட் செக்போஸ்ட் ஒன்று இருக்கிறது. அந்த வழியாகத்தான் டேமுக்கு மண் எடுப்பதற்குச் செல்ல வேண்டும். அது பாரஸ்ட்டினுடைய நிர்வாகத்தில் வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள், இன்னும் கொஞ்சம் தளர்த்தி, எல்லோரும் அந்த மண்ணை எடுத்துக் கொள்ளலாம், விவசாயிகளும் எடுத்துக் கொள்ளலாம் தேவைப்பட்டால் யார் வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாமென்ற உத்தரவை வழங்கினால் ஒரு பைசாகூட அரசுக்குச் செலவில்லாமல் தூர்வாருகின்ற நடவடிக்கையை பொதுமக்களே

1993 ஏப்ரல் 15]

பார்த்துக்கொள்வார்கள். ஆகவே, அதை வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மண் அகற்றுகின்ற பணியை அணைக்கட்டுப் பகுதியிலே நாம் அனுமதிக்க முடியாது. வரத்துக் கால்களிலே வண்டல் மண் வந்து சேர்வதால்தான் கொள்ளளவு குறைகிறது என்கிற காரணத்தால் அந்தப் பகுதியிலே வழங்கலாம். ஏற்கெனவே, இது வனத்துறை வழியாக வருகின்ற காரணத்தினால் அவர்களுடைய பொறுப்பிலே, அவர்களுடைய அனுமதியுடன் இன்றைக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதை யார் கேட்டாலும், விவசாயிகள் கேட்டாலும் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே, அணைக்கட்டுப் பகுதியிலே மிக நெருக்கமாக, அந்த அணைக்கு அருகிலே வந்து, ஆழமாக எடுத்து விடுவார்கள். ஆகவே, அது அணைக்கே, பிரச்சினையாக வந்துவிடும். ஆகவே, அதற்கென்று ஒரு ஏரியாவை ஒதுக்கி வைத்திருக்கிறோம். அந்தப் பகுதியில் எடுப்பதற்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. அப்படித் தேவைகள் இருக்குமானால், அவர் என்னிடம் தெரிவிப்பாரானால் அவர்களுக்கெல்லாம் உரிய அனுமதியை அரசு சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 350, திரு. இரா. அப்பு நடேசன், இருக்கையில் இல்லை. டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை கேட்கிறார். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

350—

கன்னியாகுமரி மாவட்டத்தில் வீணாகக் கடலில் கலக்கும் தண்ணீர்.

*11186—திரு. இரா. அப்பு நடேசன் :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் இருந்து வருடம் தோறும் வீணாகக் கடலில் கலக்கும் தண்ணீரின் அளவு எவ்வளவு?

(ஆ) அந்தத் தண்ணீரை விவசாயத்திற்குப் பயன்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?